MUTHTHARASI - Art Literary Culture Tamil Journal, Madurai.
முத்தரசி - கலை இலக்கியப் பண்பாட்டுத் தமிழ் ஆய்விதழ்,மதுரை.
VOLUME – III ISSUE - I
AUG – 2025 E-ISSN : 2584 – 1238

# எட்டுத்தொகையில் விழாக்கள்

**முனைவர் மா. முத்துச்செல்வி,**
**தமிழ்த்துறை, உதவிப்பேராசிரியர்,**
**தி ஸ்டாண்டர்டு ஃபயர் ஒர்க்ஸ் இராஜரத்தினம் மகளிர் கல்லூரி, சிவகாசி.**
DOI 10.5281/zenodo.17111711.

**Abstract :**

As people who lived in tribal societies began to transition to a landowning society, they began to live separately. It can be said that these festivals were followed by them to achieve the joy of living together. During the Sangam period, festivals such as Indra Vizha, Panguni Uthira Vishva, Karthigai Vishva, Ulli Vishva, Punalattu Vishva, Kaman Vishva, Thaineerattu Vishva, Poonthodai Vishva, and Kodiyar Vishva were celebrated. These festivals reflect the contemporary reality of the people of the Sangam period. This article examines the festivals recorded in the eight-volume literature.

Key Words : Sangam Literature - Ettuthogai - Vizha - Festivals

இனக்குழுச் சமூகமாக வாழ்ந்த மக்கள் நிலவுடைமைச் சமூகத்திற்கு மாறத் தொடங்கிய நிலையில் மக்கள் தனித்து வாழத் தொடங்கினர் . கூடி வாழ்வதிலிருந்த களிப்பினை அடைய அவர்கள் பின்பற்றியதே இவ்விழாக்கள் எனலாம் . “மனிதன் வேட்டையாடினான் . ஓய்வாக இருந்தபோது தன்களைப்பை போக்க ஆடிப்பாடினான். இதன் பயனாக விழா கொண்டாடி மகிழ்ந்தான்”[1] என்பர். மேலும், இயற்கையை வழிபடுவதும் ஒரு காரணம் எனலாம் . விழாக்கள் மக்களிடையே மகிழ்ச்சியை ஏற்படுத்தி இருந்தமையாலே சங்ககால மக்கள் விழாக்களைக் கொண்டாடியுள்ளனர்.

**விழா**

சங்க இலக்கியங்களில் விழா என்ற சொல்லிற்கு விழவு , சாறு என்ற சொற்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன. இச்சொல்லாட்சி சங்க இலக்கியத்தில் காணப்படுவதை,

**“விழவுக்களம் கமழும் உரவுநீர் சேர்ப்ப” (நற்.பா.19:15)**

என்ற பாடலடியின் வாயிலாகவும்,

**“முழவுமுகம் புலர்ந்து முறையின் ஆடிய**
**விழவொழி களத்த” (நற்.பா.360:1-2)**

என்ற பாடலடிகளின் வாயிலாகவும் அறியலாகின்றது. மேலும் விழாவைக் குறிக்க சாறு என்ற சொல்லாட்சியும் பயன்படுத்தப் பட்டுள்ளது. இதனை,

**“சாறுகொள் ஊரிற் புகல்வோன் மன்ற” (குறு.பா.41:2)**

என்ற பாடலடி விளக்குகின்றது. மேலும் இவ்விழாக்களில் மத்தள ஓசை இன்றியமையாததாக இருந்தமையை,

**“விழவும் உழந்தன்று முழவும் தூங்கின்று” (நற்.பா.320:1)**

என்ற பாடலடி விளக்குகின்றது . மத்தளங்களின் ஓசை அடங்கியது . விழாவும் முடிந்தது என்பதன் வழி விழாக்களில் மத்தள ஓசையின் முதன்மையை அறிய முடிகின்றது . மேலும் இரவு நேரங்களில் விழாக்கள் கொண்டாடப்பட்டமையை,

**“கலிகெழு மறுகின் விழவு அயரும்மே” (நற்.பா.348: 4)**

என்ற பாடலடியின் வாயிலாக அறியலாகின்றது . மேலும், “விழாக்கள் உடலுக்கு ஓய்வும் , உள்ளத்திற்கு இன்பமும் தரவல்லன . விழா எனும் சொல் விழை என்ற சொல்லின் அடியாகத் தோன்றியது. இதற்கு விருப்பம்இ பற்று ஆகிய பொருள்கள் உள”[2] என்ற கூற்றிலிருந்து விழாவானது


http://Creativecommons.org//license/by/4.0/.

மக்களின் விருப்பத்தின் அடிப்படையில் கொண்டாடப்பட்டமையை அறியமுடிகின்றது . சங்க காலத்தில் இந்திர விழா, பங்குனி உத்திர விழா, கார்த்திகை விழா, உள்ளி விழா, புனலாட்டு விழா, காமன் விழா , தைநீராட்டு விழா , பூந்தொடை விழா , கோடியர் வி ழா போன்ற விழாக்கள் கொண்டாடப்பட்டுள்ளன. இவ்விழாக்கள் சங்ககால மக்களின் நடப்பியல் மெய்மையினைச் சுட்டுகின்றது. இக்கட்டுரை எட்டுத்தொகை இலக்கியத்தில் பதிவுசெய்யப்பட்டுள்ள விழாக்கள் குறித்து ஆராய்கின்றது.

**இந்திர விழா:**

மருத நிலத்திற்கே உரிய தெய்வமான இந்திரனுக் கு எடுக்கும் விழா இந்திர விழாவாகும் . இந்திர விழா மருதநிலத்தில் கொண்டாடப்பட்டமையை,

**“இந்திர விழாவில் பூவின் அன்ன**
**புன்தலைப் பேடை வரிநிழல் அகலவும்**
**இவ்வூர் மங்கையர் தொகுத்து” (ஐங்.பா.62:1-3)**

என்ற பாடலடிகளின் வாயிலாக அறியலாகின்றது . ‘இந்திர விழாவில் பூ கொட்டிக்கிடப்பதைப் போன்று’ என்ற உவமையின் வாயிலாக இந்திர விழா குறித்தும், அவ்விழாவில் பூ பயன்படுத்தப்பட்டமை குறித்தும் பதிவு செய்யப்பட்டுள்ளது.

**பங்குனி உத்திர விழா:**

பங்குனி திங்கள் உத்திர நட்சத்திரத்தன்று உறந்தையில் நடைபெறும் பங்குனி உத் திர விழா பற்றிய செய்திகள் சங்க இலக்கியத்தில் இடம்பெற்றுள்ளமையை,

**“பங்குனி விழவின் உறந்தையொடு” (நற்.பா.234:8)**

என்ற பாடலடியின் வாயிலாக அறிய முடிகின்றது . ஆற்றின் கரைகளில் கிடக்கும் மணலிலும் அங்குள்ள மணம் கமழும் சோலையிலும் இப்பங்குனி விழா கொண்டாடப்பட்டமையை,

**“............... உறந்தை யாங்கண்**
**வருபுனல் நெரிதரும் இகுகரைப் பேரியாற்று**
**உருவவெண மணல் முருகு நாறுதண் பொழில்**
**பங்குனி முயக்கம் கழிந்த வழிநாள்” (அகம்.பா.137:6-9)**

என்ற பாடலடிகள் விளக்குகின்றன.

**கார்த்திகை விழா:**

இன்றைய கால கட்டத்தில் கொண்டாடப் படும் கார்த்திகை தீபம் ஏற்றுதலே சங்க இலக்கியத்தில் கார்த்திகை விழாவாகக் கொண்டாப்பட்டது . சங்ககாலத்தில் நிறைமதி நிறைந்த நாளில் கார்த்திகை நாள் மீன்கள் சேரும் நடுசாமத்தில் வீதிகளில் விளக்குகள் ஏற்றப்பட் ;டு மாலைகள் தொங்கவிடப்பட்டு ஊரார் ஒன்று கூடி கார்த்திகை விழாவினைக் கொண்டாடியமையை.

**“குறுமுயல் மறுநிறம் கிளர மதி நிறைந்து**
**அறுமீன் சேறும் அகல் இருள் நடுநாள்**
**மறுகு விளக்கு உறுத்து மாலை தூக்கிப்**
**பழவிறல் மூதூர்ப் பலருடன் துவன்றிய**
**விழவுஉடன் அயர வருதில் அம்ம” (அகம்.பா.141:6-10)**


http://Creativecommons.org//license/by/4.0/.

என்ற பாடலடிகளின் வாயிலாக அறியலாகின்றது. மேலும், கார்த்திகை விழாவில் விளக்கு ஏற்றினமையை,

**“அருவி ஆன்ற உயர்சிமை மருங்கில்**
**பெருவிழா விளக்கம் போல” (அகம்.பா.185:10-1**

என்ற பாடலடிகள் பதிவுசெய்துள்ளன.

**உள்ளி விழா:**

உள்ளி விழாவினை கொங்கு நாட்டைச் சார்ந்த கொங்கர்கள் கொண்டாடியுள்ளனர். அவர்கள் இவ்விழாவில் இடையில் மணியினைக் கட்டிக்கொண்டு மகிழ்ச்சியுடன் கூத்தாடினமையை,

**“..................கொங்கர்**
**மணி அரையாத்து மறுகின் ஆடும்**
**உள்ளி விழவின் அன்ன” (அகம்.பா.368:16-18)**

என்ற பாடலடிகளின் வாயிலாக அறிய முடிகின்றது. மேலும், உள்ளி விழா சேரரர்களின் தலைநகரான வஞ்சியில் நடைபெற்றமையை,

**“உள்ளி விழவின் வஞ்சியும் சிறிதே” (நற்.பா.234:11)**

என்ற பாடலடி விளக்குகின்றது.

**புனலாட்டு விழா:**

சங்ககால மக்கள் ஆற்றில் புதுப்புனல் வருகையின் பொழுது நீரைச் சிறப்புச்செய்து புனலாட்டு விழா கொண்டாடினர். நீரே உயிர்களின் வாழ்விற்கு ஆதாரம். எனவே புதுப்புனலைப் போற்றும் விதமாகவே இவ்விழா கொண்டாடப்பட்டுள்ளது. புனலில் வளமையின் அடையாளமாக இறால், நண்டு, சங்கு, வாளை போன்றவற்றை விதைத்து இவை பல்கிப்பெருக வேண்டும் என்று வழிபட்டமையை,

**“அவியமர் அழலென வரைக்குநர்**
**நத்தொடு நள்ளி நடைஇறவு வயவாளை**
**வித்தி அலையில் விளைக பொலிக என்பார்” (பரி.பா.10:84-86)**

என்ற பாடலடிகளின் வாயிலாக அறியலாகின்றது.

**காமன் விழா:**

சங்ககாலத்தில் உலக உயிர்களுக்கு இன்பத்தை வழங்கும் காமனுக்கு சிறப்புச்செய்யும் விதமாக இளவேனில் காலத்தில் காமன் விழா கொண்டாப்பட்டுள்ளது. “காமன் விழாவை உயர்ந்தவன் விழாஇி வில்லவன் விழா”[3] ஆகிய பெயர்களில் கொண்டாடப்பட்டது. இவ்விழா பெண்கள் தமக்கு நல்ல கணவர் அமையவேண்டும் என்பதற்காகவும், கணவன் தன் அன்பிலிருந்து பிரியக்கூடாது என்பதற்காகவும் கொண்டாடியமையை,

**“இருங்குயில் ஆலப் பெருந்துறை கவின் பெறக்**
**குழவி வேனில் விழவெதிர் கொள்ளும்**
**சீரார் செவ்வியும் வந்தன்று” (கலி.பா.36:8-10)**

என்ற பாடலடிகளின் வாயிலாக அறியலாகின்றது.

**தை நீராட்டு விழா:**


http://Creativecommons.org//license/by/4.0/.

தை நீராட்டு விழாவானது இளம் பெண்கள் நல் ல நற்பண்புடைய கணவன் வாய்ப்பதற்காக நோன்பிருப்பதாகும். சங்ககாலத்தில் இளம் பெண்கள் தங்கள் தோழியருடன் ஊரிலுள்ள குளத்தில் தலைமுடி ஐம்பால் ஒப்பனையுடன் தைத் திங்களில் நீராடி இவ்விழாவினை கொண்டாடினமையை,

**“நறுவீ யைம்பான் மகளிராடும்**
**தைஇத் தண்கயம் போலப்** **(ஐங்.பா.84:3-4)**

என்ற பாடலடிகளின் வாயிலாக அறியலாகின்றது . மேலும், தலைவன் தலைவி தைத்திங்களில் நீராடச்சென்றமையைக் குறிப்பிடுவதை,

**“தைஇத்திங்கள் தண்கயம் படியும்**
**பெருந் தோட் குறுமகள்”** **(நற்.பா.80:7-8)**

என்ற பாடலடிகள் பதிவுசெய்துள்ளன.

**பூந்தொடை விழா:**

படைக்கலப்பயிற்சி பெற்ற வீரர்களின் அரங்கேற்ற விழாவே பூந்தொடை விழாவாகும் . சங்ககாலத்தில் பயிற்சி முடிந்த வீரன் இல்லம் திரும்பும் போது அவனது வெற்றியைக் கொண்டாடும் பொருட்டு வீடுகளில் வர்ணம் பூசி வீட்டின் முன்னால் பந்தலிட்டு துணங்கைக் கூத்தினை ஆடி மகிழ்ந்தமையை,

**“வார் பொலிந்த வன்கண் மழவர்**
**பூந்தொடை விழவின் தலைநாள் அன்ன**
**தருமணல் ஞெமிரிய திருநகர் முற்றம்”** **(அகம்.பா.187:7-9)**

என்ற பாடலடிகளின் வாயிலாக அறியலாகின்றது.

**கோடியர் விழா:**

கோடியர் என்போர் கூத்தர்கள் என்று அழைக்கப்படுகின்றனர் . பாணர்கள், கூத்தர்கள், பொருநர்கள்இ விறலியர்கள் என அனைவரும் ஒன்றாய்ச் சேர்ந்து நிகழ்த்தும் நிகழ்வே கோடியர் விழாவாகும். சங்ககாலத்தில் ஆடல் பாடல் நிகழ்த்தும் கலைஞர்கள் இணைந்து பழமையான ஊரின் கண் விழா எடுத்துள்ளனர் . இவ்விழாவில் அனைத்துக் கலைஞர்களும் தம் திறனை வெளிப்படுத்தியமையை,

**“கோடியர் விழவு கொள்மூதூர் விறலி பின்றை**
**முழவன் போல அகப்படத்தழீ,”** **(அகம்.பா.352:4-6)**

என்ற பாடலடிகளின் வாயிலாக அறியலாகின்றது.

சங்க கால மக்கள் இயற்கைக்கு வழங்கிய முதன்மையை அவர்கள் கொண்டாடிய விழாக்களின் அடிப்படையில் அறியமுடிகிறது . பெரும்பாலும் இயற்கையை கடவுளாக எண்ணி , இயற்கைக்கு நன்றி தெரிவிக்கும் முறையிலேயே இவ்விழாக்கள் அமைந்துள்ளன . மேலும், உழைக்கும் மக்கள் களைப்பு நீங்கி மகிழ்ச்சி கொள்ள விழாக்கள் வழிவகுத்துள்ளன.

**சான்றெண் விளக்கம்**

1. பா.இறையரசன், தமிழர் நாகரிக வரலாறு, ப.237
2. கா.மு.பாபுஜி, சிலப்பதிகாரத்தில் விழாக்கள், ப.5
3. மேலது, ப.51


http://Creativecommons.org//license/by/4.0/.